ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## முயற்சியாண்மைக் கற்கை I

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

**1.** பின்வருவன முயற்சியாண்மை பற்றி முன்வைக்கப்பட்ட சில எண்ணங்கள் ஆகும்.
A - இது மனித சிந்தனையுடன் தொடர்புடைய ஒரு மனோநிலை ஆகும்.
B - புதிய கருத்துக்களையும் எண்ணக்கருக்களையும் செயற்படுத்தும் ஓர் இயல்பு ஆகும்.
C - இது ஒரு சமூக மாற்றச் செயன்முறை ஆகும்.
D - இது சமூகத்தின் நன்மைக்காகச் செயற்படும் ஓர் இயல்பு ஆகும்.
இவற்றுள் முயற்சியாண்மையைச் சரியாக விபரிக்கும் கூற்றுகள்
(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம்
(3) B, C, D மாத்திரம் (4) A, B, C, D ஆகியன அனைத்தும்

**2.** இரத்தினம், தனது உற்பத்திப்பொருளுக்குக் கவர்ச்சிகரமானதொரு பொதியிடலைத் தயாரிப்பதனை,
(1) ஆக்கத்திறனாகக் கருதலாம். (2) புத்துருவாக்கமாகக் கருதலாம்.
(3) எதிர்கால தூரநோக்காகக் கருதலாம். (4) சுற்றுச்சூழலுக்கான உணர்திறனாகக் கருதலாம்.

**3.** முயற்சியாளர் தனது ஆக்கத்திறனை,
(1) ஊழியர்களின் ஆற்றல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் விருத்தி செய்யலாம்.
(2) முயற்சியாண்மை பற்றிய கல்வியின் மூலம் விருத்தி செய்யலாம்.
(3) ஊழியர்களின் ஆக்கத்திறனுக்கு நிதிசார்ந்த பரிசில்களை வழங்குவதன் மூலம் விருத்தி செய்யலாம்.
(4) வணிக முகாமைத்துவ நடவடிக்கைகளை பணிப்பாளர் சபைக்குக் கையளிப்பதன் மூலம் விருத்தி செய்யலாம்.

**4.** சலவை வணிக எண்ணக்கரு சந்தையில் நுழைவதற்குச் செல்வாக்குச் செலுத்திய புத்துருவாக்கத்தின் மூலமாக (Source) அமைந்தது
(1) செயன்முறைத் தேவைப்பாடு ஆகும்.
(2) குடித்தொகைச் சூழல் மற்றும் வாழ்க்கைப் பாங்கின் மாற்றங்கள் ஆகும்.
(3) புலனுணர்வுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகும்.
(4) சந்தை மாற்றங்கள் ஆகும்.

**5.** வங்கி நடவடிக்கைகளுக்காக வங்கிக்குச் செல்ல வேண்டியது கட்டாயமானதென எண்ணி, செவ்வந்தி தான் எதிர்பார்த்த வணிகத்திற்கான வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதில்லை எனத் தீர்மானித்தார். இங்கு செவ்வந்தியின் சிந்தனையைத் தடுத்த காரணி
(1) உடனடியான முடிவுகளை எதிர்பார்த்தல் ஆகும்.
(2) தவறுகள் மற்றும் விமர்சனங்களுக்கான பயம் ஆகும்.
(3) நடைமுறைக்குத் தடைகள் இருப்பதாக நினைத்தமை ஆகும்.
(4) தர்க்கரீதியான அடிப்படையில் செயற்படவில்லை என்பதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

6. நிசானி, தனது கைவினைப் பொருட்களைக் காசுக்கு மட்டும் விற்பனை செய்கின்ற போதிலும், தனது உற்பத்திப் பொருட்களைக் கடன் அட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யத் தீர்மானித்தார். நிசானி, இதன்மூலம் எடுத்துக்காட்டும் முயற்சியாண்மைசார் குணாம்சம்
(1) சுயாதீனம் ஆகும். (2) தகவல்களைத் தேடுதல் ஆகும்.
(3) எதிர்கால தூரநோக்கு ஆகும். (4) நெகிழ்வுத்தன்மை ஆகும்.

7. உற்பத்திக் காரணிகளில் மிகவும் விசேடமான காரணி
(1) நிலம் ஆகும். (2) உழைப்பு ஆகும்.
(3) மூலதனம் ஆகும். (4) முயற்சியாண்மை ஆகும்.

8. ராமண்ணா பிஸ்கட் நிறுவனத்தால் சீனி இல்லாத பிஸ்கட் வகையொன்று அறிமுகப்படுத்தப்பட்டமையை
(1) ஒரு புதிய கண்டுபிடிப்பாகக் கருதலாம்.
(2) ஒரு விரிவாக்கமாகக் கருதலாம்.
(3) ஒரு பிரதிபண்ணலாகக் கருதலாம்.
(4) ஒரு இணைப்பாகக் கருதலாம்.

9. எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தனது வணிகத்தை சரியான பாதையில் வழிநடத்த முடியுமென சுனிமல் கூறுகின்றார். இதன் மூலம் பிரதிபலிக்கும் முயற்சியாண்மைக் குணாம்சம்
(1) நெகிழ்வுத்தன்மை ஆகும். (2) ஆக்கத்திறன் ஆகும்.
(3) எதிர்கால தூரநோக்கு ஆகும். (4) சுயதன்னம்பிக்கை ஆகும்.

10. சிறிமல் என்பவரின் பிரதான குறிக்கோள் தேசிய பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு பட்டத்தைப் (degree) பெற்றுக் கொள்வதாகும்.
இக்கூற்றிலுள்ள தேவையையும் விருப்பத்தினையும் முறையே குறித்து நிற்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) கல்வி, தேசிய பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டத்தைப் பெற்றுக்கொள்ளல்
(2) பொழுதுபோக்கு, தேசிய பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டத்தைப் பெற்றுக்கொள்ளல்
(3) பாதுகாப்பு, தேசிய பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டத்தைப் பெற்றுக்கொள்ளல்
(4) தேசிய பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டத்தைப் பெற்றுக்கொள்ளல், கல்வி

11. தனது பயிர்ச்செய்கையை இரசாயனப் பசளையில் இருந்து சேதனப் பசளைக்கு மாற்றியதன் மூலம் உயர்ந்தளவான நன்மையைப் பெற்றுக் கொண்ட குசலன்
(1) அக முயற்சியாளர் ஆவார். (2) சமூக முயற்சியாளர் ஆவார்.
(3) வணிக முயற்சியாளர் ஆவார். (4) நிறுவக முயற்சியாளர் ஆவார்.

12. முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளர் ஒருவர் அடையும் நன்மை
(1) புதிய பொருட்கள், சேவைகளைச் சந்தைக்கு முன்வைத்தல்
(2) வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்
(3) உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல்
(4) பயன்படுத்தப்படாத அறிவுத்திறன்களைப் (talents) பயன்படுத்த முடிதல்

13. முயற்சியாளரொருவர், முகாமையாளர் வகிபாகத்தை வகிப்பதன் மூலம் மேற்கொள்ளும் கருமம்
(1) வணிகத் திட்டங்களை உருவாக்குதல்
(2) வணிகத்துக்கு அவசியமான வளங்களை வாங்குதல்
(3) ஊழியர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்குதல்
(4) வணிகத்தின் இலாப நட்டங்களைத் தாங்கிக் கொள்ளுதல்

14. புதிய முயற்சியாளர் ஒருவர் சந்தைக்குள் நுழையும்போது அதிக இடர் காணப்படுவது
(1) தற்போது காணப்படும் ஓர் உற்பத்திப்பொருளை புதிய சந்தைக்கு முன்வைக்கும் போதாகும்.
(2) தற்போது காணப்படும் ஓர் உற்பத்திப்பொருளை தற்போதைய சந்தைக்கு முன்வைக்கும் போதாகும்.
(3) ஒரு புதிய உற்பத்திப்பொருளை தற்போதைய சந்தைக்கு முன்வைக்கும் போதாகும்.
(4) ஒரு புதிய உற்பத்திப்பொருளை புதிய சந்தைக்கு முன்வைக்கும் போதாகும்.

15. முறைசார்ந்த நடைமுறையொன்றைப் பின்பற்றி வணிகத்திற்குச் சிறந்த ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் ஆற்றலானது, ஒரு முயற்சியாளரின்
(1) மானிடத் திறனாகும். (2) தொழில்நுட்பத் திறனாகும்.
(3) ஆலோசனைத் திறனாகும். (4) எண்ணக்கருவாக்கத் திறனாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**16.** தற்போதைய வணிகச் சூழலைவிட முன்னைய கால வணிகச் சூழலில் காணப்பட்ட சிறப்பம்சம் யாது?
(1) இலாபமே முக்கிய நோக்கமாகக் காணப்பட்டமை
(2) நுகர்வோர் அதிக சக்திவாய்ந்தவர்களாகக் காணப்பட்டமை
(3) தேவையை நிறைவேற்றுவதற்கு அதிகமான பொருட்கள் மற்றும் சேவைகள் காணப்பட்டமை
(4) அதிகளவான சர்வதேசத் தொடர்புகள் காணப்பட்டமை

**17.** தருமன் பொருட்களை விற்பனை மற்றும் விநியோகம் செய்யும் வணிகமொன்றைக் கொண்டு நடாத்துகின்றார். அவரது வணிகத்துக்கான ஒரு பலம்
(1) வினைத்திறனான ஊழியர்கள் இருவர் காணப்படுதல்
(2) அரசாங்கத்தினால் அறவிடப்படும் வரிவீதம் குறைவடைந்தமை
(3) வியாபாரப் பொருட்களை வழங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்தமை
(4) வணிகங்களுக்காக வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி வீதம் குறைவடைந்தமை

**18.** தற்போது வணிக நடவடிக்கைகளுக்காக செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துதல்
(1) பொருளாதாரச் சூழலுக்கு உரித்தாகும். (2) விஞ்ஞான தொழில்நுட்பச் சூழலுக்கு உரித்தாகும்.
(3) குடித்தொகைச் சூழலுக்கு உரித்தாகும். (4) அரசியல் மற்றும் சட்டச் சூழலுக்கு உரித்தாகும்.

**19.** வணிக நடவடிக்கைகளுக்குப் பொருளாதாரச் சூழலின் மூலம் உருவாக்கப்படும் தாக்கமாக அமைவது
(1) இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி வீதம் அதிகரிக்கப்படல்
(2) முறையான தரச் சான்றிதழின் கீழ் பொருட்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படல்
(3) வங்கி வட்டி வீதம் அதிகரிக்கப்படல்
(4) பொருளாதார நன்மைகளை வழங்கும் சர்வதேச உடன்படிக்கைகளில் ஈடுபடல்

**20.** தற்போதைய இலங்கைப் பொருளாதாரத்தில் மூன்றாம் நிலைத் துறையின் கீழ் உள்ள வணிகம்
(1) ஓட்டுத் தொழிற்சாலை (2) கட்டட நிர்மாணச் செயற்றிட்டம்
(3) சில்லறைக் கடை (4) அலங்கார மீன்வளர்ப்பு

**21.** பல வணிக எண்ணங்களை இனங்காண முடியுமாயுள்ள போதிலும் அவை வணிக வாய்ப்புக்களாக **மாற்றப்படாமைக்கான** பிரதான காரணம்
(1) குறைவான முயற்சியாண்மைசார் மனோநிலைகள் காணப்படுதல்
(2) வணிகங்களுக்கு முறையான தேசியக் கொள்கைகள் காணப்படாமை
(3) மூலதனத்தைப் பெறுவதில் காணப்படும் சிக்கல்கள்
(4) போட்டிக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியாதிருத்தல்

**22.** முகங் கழுவுவதற்கான ஒரு வகைத் திரவத்தைத் தயாரிப்பதற்கான வணிக எண்ணம் உருவாகக்கூடியது
(1) வெகுஜன ஊடகத்தின் மூலமாகும்.
(2) சந்தைக் கேள்வி மூலமாகும்.
(3) சந்தை அளவையாய்வின் மூலமாகும்.
(4) தனிப்பட்ட திறன்கள் மற்றும் அனுபவங்கள் மூலமாகும்.

**23.** தற்போது காணப்படும் பொருள் அல்லது சேவை ஒன்றினை புதிய சந்தை ஒன்றுக்கு அறிமுகப்படுத்துவதாகக் கருதக்கூடிய வணிக வாய்ப்பு
(1) கிராம விவசாயிகளுக்காக காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மீது மட்டும் புதிய எண்ணியல் (digital) கொடுப்பனவு முறைமையை அறிமுகம் செய்தல்
(2) நிகழ்நிலை ஊடாக வைத்தியர்களுடன் இணைய முடிதல்
(3) வெளிநாடுகளில் வசிக்கும் கொள்வனவாளர்களுக்கு பொருட்களை விநியோகிக்கும் சேவையை ஆரம்பித்தல்
(4) பெண்களுக்காக ஒரு புதிய வகையான முகம் கழுவும் திரவத்தை அறிமுகம் செய்தல்

**24.** நந்தன், தனது வணிகத்தை ஒரு பங்குடைமையாக ஆரம்பிக்கத் தீர்மானித்தார். இவ்வணிகத்தின் உடைமையாளர்களாக இருக்கக்கூடிய நபர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை
(1) 2 (2) 10 (3) 20 (4) 50

**25.** வரையறுத்த தனியார் கம்பனிகள் தொடர்பிலான **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஒரு நபரினால் கூட ஆரம்பிக்க முடியும்.
(2) கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக பொது மக்களை அழைக்க முடியும்.
(3) முகாமையானது பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(4) கணக்கு வைப்பும் கணக்காய்வும் கட்டாயமானதாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

26. வணிக நிறுவனங்களானவை தனியார் துறை வணிகங்கள், பொதுத் துறை வணிகங்கள் என வகைப்படுத்தப்படுவது
(1) வணிகத்தின் நோக்கத்தின் அடிப்படையிலாகும்.
(2) வணிகத்தின் உடைமையாளர்களின் பொறுப்புக்களின் அடிப்படையிலாகும்.
(3) வணிகத்தின் உடைமை அடிப்படையிலாகும்.
(4) வணிகத்தினால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையிலாகும்.

27. தனியுடைமை வணிகத்திற்கான வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுவது
(1) பிரதேச செயலாளரால் ஆகும்.
(2) மாவட்டச் செயலாளரால் ஆகும்.
(3) மாகாண பிரதம செயலாளரால் ஆகும்.
(4) வியாபார அமைச்சின் செயலாளரால் ஆகும்.

28. முயற்சியாளரால் நிறைவேற்றப்படும் ஒரு பொதுநலப் பொறுப்பாக அமைவது
(1) வரையறுத்த வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல்
(2) சிறிய பாடசாலை ஒன்றுக்கு விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்தல்
(3) ஊழியர் சேமலாப நிதியத்தை முறையாகச் செலுத்துதல்
(4) வணிகத்தினால் வழங்கப்படும் சேவையின் தரத்தை முன்னேற்றுதல்

29. முயற்சியாளராவதற்குப் பெண்களிடம் காணப்படும் பலமாக எதனைக் கருதலாம்?
(1) சுதந்திரமாக இருத்தல்
(2) அதிகளவான அனுபவங்களைக் கொண்டிருத்தல்
(3) சிக்கனமாக இருத்தல்
(4) இடர்களுக்கு முகங்கொடுப்பதில் பயமில்லாதிருத்தல்

30. வணிகமொன்றை நடாத்திச் செல்லும்போது ஒழுக்கக் கோவையை பின்பற்ற வேண்டியமைக்கான காரணம்
(1) அதனூடாக இலாபத்தை உச்சப்படுத்த முடியும் என்பதனாலாகும்.
(2) உடைமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பிணக்குகளைத் தவிர்க்க முடியும் என்பதனாலாகும்.
(3) இயற்கைச் சூழலுக்குத் தீங்கு விளைவிக்காமல் வணிகத்தை நடாத்த முடியும் என்பதனாலாகும்.
(4) இது அரசினால் சகல வணிகங்களுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதொரு சட்டம் என்பதனாலாகும்.

31. ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்படும் பொருள்களுக்கான தரத்தை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவது,
(1) கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஆகும்.
(2) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தினால் ஆகும்.
(3) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஆகும்.
(4) இலங்கை தர நிறுவகத்தினால் ஆகும்.

32. முயற்சியாண்மைசார் கலாசாரத்தில் வாழும் நபர் ஒருவரில் காணக்கூடிய முயற்சியாண்மைப் பண்பு
(1) தற்போதைய நிலையில் திருப்தி அடைதல்
(2) எப்போதும் நேர்ப்பாங்காகச் சிந்தித்தல்
(3) சுற்றுச்சூழலுக்கு உணர்திறன் இல்லாதிருத்தல்
(4) தற்போதைய விடயங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்யாதிருத்தல்

33. வாசிப்பவரின் மனதில் வணிகம் பற்றிய முழுமையான தோற்றம் உருவாகும் விதத்தில் வணிகத் திட்டத்தில் எந்த மூலக்கூறு தயாரிக்கப்பட வேண்டும்?
(1) நிறைவேற்றுச் சுருக்கம் (2) நிதித் திட்டம்
(3) உற்பத்தித் திட்டம் (4) நிர்வாகத் திட்டம்

34. பிரேரிக்கப்பட்ட வணிகம் ஒன்றினது சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படி
(1) பதவிநிலைகளையும் பொறுப்புக்களையும் எடுத்துக்காட்டும் அமைப்பு வரைபடம்
(2) போட்டியாளர்களிடம் இருந்தான வழங்கல் பகுப்பாய்வு
(3) மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று
(4) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைக் கணிப்பிடும் கூற்று

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**35.** முயற்சியாளர் ஒருவர் சந்தைப்படுத்தற் கலவையை அடிப்படையாகக் கொண்ட சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களைத் தெரிவுசெய்யும்போது 'உற்பத்திப்பொருள்' எனும் மாறியின் கீழ் செய்யும் கருமமாக அமைவது

(1) உற்பத்திப்பொருளுக்கான பெயரைத் தீர்மானிக்கும் விதம் பற்றிக் கருத்திற் கொள்ளலாகும்.
(2) உற்பத்திப்பொருளுக்கான விலையைத் தீர்மானிக்கும் விதம் பற்றிக் கருத்திற் கொள்ளலாகும்.
(3) உற்பத்திப்பொருளை விற்பனை செய்யும் விதம் பற்றிக் கருத்திற் கொள்ளலாகும்.
(4) உற்பத்திப்பொருளுக்கான வாடிக்கையாளர் கவர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் விதம் பற்றிக் கருத்திற் கொள்ளலாகும்.

**36.** பிரேரிக்கப்பட்ட உற்பத்தி வணிகம் ஒன்றின் நிர்வாகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிர்வாகச் செலவாக அமைவது

(1) தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளங்கள்
(2) விநியோக வாகனக் கட்டணங்கள்
(3) காகிதாதிகளுக்கான செலவுகள்
(4) வணிகத்தின் கால்கோள் விழாவுக்கான செலவுகள்

**37.** வணிகத்தினால் வங்கிக் கடன்களுக்காகச் செலுத்தப்படும் வட்டியானது

(1) நிர்வாகச் செலவாகக் கருதப்படும்.
(2) நிதிச் செலவாகக் கருதப்படும்.
(3) வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவாகக் கருதப்படும்.
(4) சந்தைப்படுத்தல் செலவாகக் கருதப்படும்.

**38.** வணிகமொன்றின் நிதித் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவாக அமைவது, வணிகத்திற்காக

(1) கட்டடமொன்றை வாங்குதல் ஆகும்.
(2) இயந்திரங்களையும் உபகரணங்களையும் வாங்குதல் ஆகும்.
(3) இணைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகும்.
(4) இரண்டு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகும்.

**39.** பிரேரிக்கப்பட்ட உற்பத்தி வணிகமொன்றின் உற்பத்தித் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள நிலையான சொத்தாக அமைவது

(1) அலுவலக தளபாடம் ஆகும்.
(2) விநியோக வாகனங்கள் ஆகும்.
(3) வியாபாரக் கட்டடங்கள் ஆகும்.
(4) தொழிற்சாலை இயந்திரங்களும் உபகரணங்களும் ஆகும்.

**40.** புதியதொரு வகையான சவர்க்காரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கும் ஹர்சா என்பவரால் தயாரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவுகள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட் கிரயம் | 50 000 |
| ஊழியர் கிரயம் | 30 000 |
| ஏனைய உற்பத்திச் செலவுகள் | 10 000 |
| நிர்வாகச் செலவுகள் | 20 000 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 10 000 |

ஹர்சாவின் புதிய உற்பத்திப்பொருளுக்கான மொத்த உற்பத்திக் கிரயம்

(1) ரூ. 80 000 (2) ரூ. 90 000 (3) ரூ. 110 000 (4) ரூ. 120 000

**

[பக். 6 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

| | |
|---|---|
| ව්‍යවසායකත්ව අධ්‍යයනය | I, II |
| முயற்சியாண்மைக் கற்கை | I, II |
| Entrepreneurship Studies | I, II |

## முயற்சியாண்மைக் கற்கை II

※ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையைக் கவனமாக வாசித்து, (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அநுராதபுரத்திலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களுக்கு அண்மையிலுள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் நுகேஷ் தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரிகின்றார். அவர், என்றாவது ஒருநாள் தனது சொந்த வணிகத்தை ஆரம்பித்து அதனை சர்வதேச மட்டத்துக்கு உயர்த்துவேன் என எப்பொழுதும் கூறுவார். பெரும்பாலான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் கிராமங்களில் சில நாட்கள் தங்கியிருந்து கிராம வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகின்றனர் என சுற்றுலா வழிகாட்டியாகப் பணிபுரியும் நுகேஷின் நண்பரான தனுஜன் அவருக்குக் கூறினார். நுகேஷ் குளமொன்றுக்கும் நெல் வயல்களுக்கும் அண்மையில் அமைந்துள்ள தனது காணியில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்காக 'கிராம வாழ்க்கை' என்ற பெயரில் 'சுற்றுலா வாசஸ்தலம்' (Tourist Resort) ஒன்றைத் தனது நண்பரான தனுஜனதும் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கத் தீர்மானித்தார். இக்காணியானது ரூ. 9 000 000 ஆக மதிப்பிடப்பட்டது.

- நுகேஷும் தனுஜனும் தமது வணிகத்துக்காக பின்வருவனவற்றைச் செய்ய உடன்பட்டனர்.

※ நுகேஷின் காணிக்கு மேலதிகமாக வணிகத்துக்காக நுகேஷும் தனுஜனும் முறையே ரூ. 1 500 000, ரூ. 3 500 000 ஐ முதலீடு செய்தல் வேண்டும்.

※ களிமண், மரம் மற்றும் தென்னோலை போன்ற உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பண்டைய கால கிராம வீடுகளுக்கான அம்சங்களுடன் நான்கு சிறிய வீடுகளை நிர்மாணித்தல்

※ வணிகம் தொடர்பான பயிற்சியோ அல்லது சேவை அனுபவமோ இல்லாத நான்கு கிராமத்து இளைஞர்களை வணிகத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

※ சமூக ஊடகங்களூடாக தமது வணிகத்தை விளம்பரப்படுத்துவதுடன், வாசஸ்தலத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

(i) நுகேஷில் கண்டுகொள்ளக்கூடிய முயற்சியாண்மை சார்ந்த குணாம்சங்கள் **நான்கினை** எழுதுக.

(ii) (அ) நுகேஷுக்கு இந்த வணிக எண்ணம் ஏற்படுவதற்குக் காரணமானது யாது?
(ஆ) பிரேரிக்கப்பட்ட இவ்வணிகத்தின் இலக்கு வாடிக்கையாளர் யார்?

(iii) நுகேஷும் தனுஜனும் பிரேரிக்கப்பட்ட தமது வணிகத்தை ஆரம்பிக்கக்கூடிய வணிக நிறுவன வகைகள் **இரண்டினை** எழுதுக.

(iv) நுகேஷினதும் தனுஜனினதும் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் பலம், பலவீனம் ஒவ்வொன்றை எழுதுக.

(v) முயற்சியாளர்களாக நுகேஷும் தனுஜனும் உரிமையாளர் வகிபாகத்தைப் பூர்த்தி செய்யும் விதத்தை எடுத்துக்காட்டும் உதாரணங்கள் **இரண்டினைச்** சம்பவக் கற்கையிலிருந்து தருக.

PAST PAPERS WIKI

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



- நுகேஷ் மற்றும் தனுஜனால் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் வணிகத் திட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| வணிகத்தைப் பதிவு செய்தல் ........................................................ | 12 000 |
| காணிக்கான மின்சாரம் மற்றும் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளல்....... | 68 000 |
| சிறிய வீடுகளை நிர்மாணித்தல் ................................................. | 1 200 000 |
| தளபாடங்களும் உபகரணங்களும்................................................ | 800 000 |
| வணிகத்தின் கால்கோள் நாள் விழாவுக்கான செலவுகள் ................ | 20 000 |
| ஊழியர் சம்பளம் ...................................................................... | 200 000 |
| நாளாந்த வணிக நடவடிக்கைகளுக்காக .................................... | 1 600 000 |
| விளம்பரப்படுத்தல் மற்றும் போக்குவரத்துக்காக ............................ | 400 000 |
| எதிர்பார்க்கப்பட்ட மாதாந்த வருமானம் ..................................... | 3 400 000 |

**வேண்டப்படுவது:** பிரேரிக்கப்பட்ட நுகேஷ் மற்றும் தனுஜனின் வணிகத்துக்காக பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(vi) மொத்த முதலீடு
(vii) மொத்த நிலையான சொத்துக்கள்
(viii) வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகள்
(ix) மொத்த மதிப்பிடப்பட்ட காசு உள்வருகைகள்
(x) முதல் மாதத்திற்கான (அ) மொத்த செலவு
(ஆ) தேறிய இலாபம்

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) நபர் ஒருவர், தொழிலொன்றில் ஈடுபடுவதை விட முயற்சியாளராவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினை** எழுதுக.
(ii) முயற்சியாளருக்கும் வணிகருக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக.
(iii) நபர் ஒருவர் முயற்சியாளராவதற்கு கண்ணும் மூளையும் உதவும் விதத்தைச் சுருக்கமாகத் தருக.
(iv) எந்தவொரு பிரச்சினைக்கும் ஆக்கத்திறனான முறையில் தீர்வுகளைக் கண்டறியும்போது உருவாகக்கூடிய தடைகள் **நான்கினை** எழுதுக.
(v) 'முயற்சியாளர்கள் ஒரு நாட்டுக்குச் சொத்தாக அமைவர்.' இக்கூற்றை நியாயப்படுத்துவதற்கான காரணிகள் **இரண்டினைத்** தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**3.** (i) உற்பத்திக் காரணியான 'மூலதனம்' என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாக விளக்கி, அதற்கான உதாரணங்கள் **இரண்டினை** எழுதுக.
(ii) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிற்றளவு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் வழிகள் **இரண்டினை** எழுதுக.
(iii) வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றும் வணிகத்துக்குப் பலமாக அமையும் விதத்தினைத் தனித்தனியாக எழுதுக.
(iv) இலங்கையின் பிரதான வணிகத் துறைகளான முதனிலை மற்றும் இரண்டாம் நிலை வணிகத் துறைகள் ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** உதாரணங்கள் வீதம் தருக.
(v) முயற்சியாளர் ஒருவரது எண்ணக்கருவாக்கத் திறனைக் குறிப்பிடக்கூடிய சந்தர்ப்பங்கள் **இரண்டினை** எழுதுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**4.** (i) இயற்கைச் சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மானிடரல்லாத வளங்கள் **இரண்டினைப்** பெயரிட்டு, அவற்றிலிருந்து உருவாக்கக்கூடிய வணிக வாய்ப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ii) பின்வரும் வணிக நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான ஒவ்வோர் இடத்தினை எழுதுக.
(ஆ) வரவேற்பு மண்டபமொன்றைத் திறத்தல்
(ஆ) புத்தகசாலை ஒன்றை ஆரம்பித்தல்
(iii) தற்போது தொழிற்படும் சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளையோ அல்லது சேவையையோ வழங்குவதனூடாக சந்தைக்குள் உட்பிரவேசிப்பதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலமொன்றையும் பிரதிகூலமொன்றையும் எழுதுக.
(iv) தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வணிகங்கள் உருவாவதற்கு வணிக எண்ணங்கள் பல்வேறு வழிகளில் புத்துருவாக்கம் பெற்றுள்ளன. அவ்வாறு வணிக எண்ணங்கள் புத்துருவாக்கம் பெறும் மூலங்கள் **நான்கினை** எழுதுக.
(v) (ஆ) 'ஆக்கவுரிமை' என்றால் என்ன?
(அ) ஆக்கவுரிமையைப் பெறுவதனால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினை** எழுதுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**5.** (i) எந்தவொரு வணிக நிறுவனத்திலும் காணக்கூடிய பொதுவான குணாம்சங்கள் **இரண்டினை** எழுதுக.
(ii) உடைமையாண்மை அடிப்படையில் வணிக நிறுவனங்களை வகைப்படுத்தி, அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(iii) பெரும்பாலான முயற்சியாளர்கள் தமது வணிகங்களை தனியுடைமையாகவோ அல்லது பங்குடமையாகவோ ஆரம்பிப்பதைவிட தனியார் வரையறுத்த கம்பனியாக ஆரம்பிக்க விரும்புவதற்கான **இரண்டு** காரணங்கள் தருக.
(iv) முயற்சியாளர் ஒருவர் தனது வணிகத்தை தனியுடைமையாகவன்றி பங்குடைமையாக நடாத்துவதன் மூலம் அவர் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் **இரண்டினை** எழுதுக.
(v) அங்கீகார வணிகங்களின், அங்கீகார வணிக உடன்படிக்கை ஒன்றில் உள்ளடக்கப்படும் பொதுவான உடன்பாடுகள் **இரண்டினை** எழுதுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**6.** (i) 'முயற்சியாண்மைசார் கலாசாரம்' என்றால் என்ன?
(ii) ஒரு நாட்டில் காணப்படும் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை முயற்சியாண்மைசார் கலாசாரத்தினூடாகத் தீர்க்கக்கூடிய வழிகள் **இரண்டினை** எழுதுக.
(iii) பெண்கள் வணிகங்களில் நுழைவதற்கு வணிகச் சூழலுக்குள்ளே வாய்ப்புகள் காணப்படுவது முக்கியமானதாகும். இலங்கையின் பொருளாதாரத்தில் காணக்கூடிய அவ்வாறான வாய்ப்புகள் **இரண்டினை** எழுதுக.
(iv) ஒரு நாட்டின் வணிகங்களுக்கு வணிக ஒழுக்கங்கள் தேவையானவை என்பதற்கான காரணங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக.
(v) வணிகங்கள் சட்டரீதியான பொறுப்புக்களை **நிறைவேற்றாமை** காரணமாக ஒரு நாடு முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் **இரண்டினை** எழுதுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**7.** பின்வருவன நிகிலன் என்பவரின் பிரேரிக்கப்பட்ட வணிகத்துக்காகத் தயாரிக்கப்பட்ட வணிகத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட சில தகவல்கள் ஆகும்.

* ரூ. 1 500 000 ஆன நிகிலனின் கட்டடம் வணிகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.
* வங்கிக் கடனாக ரூ. 500 000 பெற்றுக்கொண்டு, இப்பணத்தைப் பயன்படுத்தி ரூ. 500 000 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.
* நிகிலனின் சொந்தப் பணத்தில் இருந்து பின்வரும் செலவுகள் செலுத்தப்பட்டன.
  - வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ரூ. 20 000
  - வணிகத்தின் கால்கோள் நாள் விழாச் செலவுகளுக்காக ரூ. 15 000
  - நாளாந்த வணிக நடவடிக்கைகளுக்காக ரூ. 365 000

**வேண்டப்படுவது:**
மொத்த நிலையான சொத்துக்கள், ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகள், மொத்த தொழிற்படு மூலதனம் மற்றும் மொத்த முதலீடு என்பவற்றைக் காட்டக்கூடியதாக நிகிலனின் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் மொத்த முதலீட்டு மதிப்பீட்டைத் தயாரிக்குக.
(விடையளிப்பதற்குப் பின்வரும் மாதிரியைப் பயன்படுத்துக.)

| விபரம் | பிரேரிக்கப்பட்ட முதலீடு | | மொத்த முதலீடு (ரூ.) |
|---|---|---|---|
| | உடைமையாளர் (ரூ.) | வங்கிக் கடன் (ரூ.) | |
| | | | |

(மொத்தம் 10 புள்ளிகள்)

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න